

இந்தியா தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் நடத்தப்பட்ட ஓவியப்போட்டிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில், டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இன்று (13.01.2017) நேரில் சென்று பார்வையிட்டார்.

செ.வெ.எண்: 36/2017 நாள்: 13.01.2017

**இந்தியா தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி,
கன்னியாகுமரி மாவட்டத்தில் நடத்தப்பட்ட ஓவியப்போட்டிகளை,
மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள்,
நாகர்கோவில், டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில்
இன்று (13.01.2017) நேரில் சென்று பார்வையிட்டார்.**

இந்தியா தேர்தல் ஆணையத்தின்அறிவுரையின்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் நடத்தப்பட்டஓவியப்போட்டிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில், டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இன்று (13.01.2017) நேரில் சென்று பார்வையிட்டு தெரிவித்ததாவது:-

இந்தியா தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, பள்ளி கல்வித்துறை சார்பாக, ஒவ்வொரு வாக்கும் முக்கியமே, வாக்களிப்பது நம் ஜனநாயக கடமை என்ற தலைப்பில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 3 கல்வி மாவட்டங்களில் (நாகர்கோவில், குழித்துறை, தக்கலை) 10, 11, 12-ம் வகுப்பில் பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஓவியப்போட்டி நாகர்கோவில் டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இன்று (13.01.2017) நடைபெற்றது.

இந்தியா தேர்தல் ஆணையத்தின்படி, 100 சதவீதம் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக, பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, 18 வயது பூர்த்தியவுள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் வாக்களிப்பது அவசியம் மற்றும் முக்கியத்துவம் குறித்தும், அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றவகையிலும், நடைபெறவுள்ள தேர்தலில் அவர்கள் வாக்களிக்க வேண்டும் என்பதற்காகவும், ஜனவரி 7 முதல் 18-ம் தேதி வரை பல்வேறு இடங்களில் ஓவியப்போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெறும் மாணவ, மாணவியர்களுக்கு ஜனவரி 25-ம் தேதி தேசிய வாக்காளர் தினத்தன்று பரிசுகள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கப்படுகிறது என தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற ஓவியப்போட்டியில் சுமார் 50-க்கும் மேற்பட்ட பள்ளிகளிலிருந்து சுமார் 150 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் தேர்தல் வட்டாட்சியர் திரு. சுப்பிரமணியன், திரு. விஜயக்குமார் உள்ளிட்ட பள்ளி கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.